# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2225 மேழம் (ஏப்-மே-94) விலை உருபா 1-50 (இதழ் எண்: 170)


## ‘ஆதி திராவிடன்’ என்பது வரலாற்றுப் பிழை!
## ‘அரிஜன்’ என்பது காந்தியின் ஏமாற்று!
## தாழ்த்தப்பட்டவன் என்பது தன்மானமின்மை!
## ‘தலித்’ என்பது தமிழின இழப்பு!
## ‘பழந்தமிழன்’ என்பதே சிறப்பும் பெருமையும்!
## ‘ஆதிஆந்திரன்’ ‘ஆதிகன்னடன்’ ‘ஆதிகேரளன்’ -என்று பிறர் தம்மைச் சுட்டும் பொழுது, ‘ஆதி(பழந்)தமிழன்’ என்பதே சிறந்தது!

### பழந்தமிழ்க்குடி மக்களுக்குப் பாவலரேறுவின் அறிவுரை!

தமிழர்களைத் ‘**திராவிடர்**’ என்று அழைப்பது மொழியியல் படியும் இனவியல் படியும் வரலாற்றுத் தவறானது என்பதையும், தமிழிலிருந்து சமசுக்கிருதத் தொடர்பால் பிரிந்த ஏனைய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய மொழிகளே ‘**திராவிட**’ மொழிகள் என்பதையும், அவற்றைப் பேசுபவரே ‘**திராவிடர்கள்**’ என்பதையும் முந்தைய **தமிழ்நிலம்** (167,168) இதழ்களில் எடுத்துக் கூறினோம். அஃதாவது ‘**திராவிடம்**’ என்னும் சொல் தமிழ் மொழியை ஆரியர்கள் ஒலியியல் மாறுபாட்டுடன் குறித்த சொல். ஆனால் அதை மொழி வரலாறு எழுதிய அறிஞர் **கால்டுவெல்** அவர்கள் தமிழ் தவிர்த்த ஏனைய மொழிகளைக் குறிப்பதற்கு ஒரு மொழியியல் குறியீட்டுச் சொல்லாகவே பயன்படுத்தினர். அதே போல, தமிழர்கள் வடபுலம் சென்று வாழ்ந்து பரவியிருந்த பொழுது, ஆரியர்கள் அவர்களை மூலத் தமிழினத்திலிருந்து வேறு பிரித்துக் காட்ட **திராவிடர்கள்** என்று வரலாற்றாசிரியர்கள் குறிக்க வேண்டியிருந்தது. திராவிடர்கள் தமிழினத்திலிருந்து ஆரிய மொழிக்கலப்பாலும், இட வேறுபாட்டாலும் மாறுபட்டவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்ற ஒரு குறியீட்டுச் சொல்லேயன்றித் தமிழர்களை அச் சொல் ஒருபோதும் குறியாது.

எனவே, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலியவை தமிழ் மொழியினின்று பிரிந்த மொழிகள் ஆகுமேயன்றி, அவை ஒருபோதும் தமிழ் ஆகிவிடா. அது போலவே தமிழும், தமிழரும் ஒரு போதும திராவிடமும், திராவிடரும் ஆகிவிட மாட்டார். தமிழ் என்பது மூலமொழி; தமிழர் என்பவர் மூல இனத்தினர். அது போலவே திராவிடம் என்பது தமிழினின்று பிரிந்த மொழிக் கூட்டத்தையும், திராவிடர் என்பவர் தமிழரினின்று பிரிந்த கலப்பு மொழிக் கூட்டத்தினரையுமே குறிக்கும்.

சமசுக்கிருதம் இல்லாமல் திராவிடம் இல்லை; திராவிடரும் இல்லர். ஆனால், சமசுக்கிருதம் நீங்கினால் ஏனைய திராவிட மொழிகள் அனைத்தும் தமிழே! திராவிட மொழியினர் அனைவரும் தமிழரே! தமிழரையும், ஆரியரையும் அல்லாமல் இந்தியாவில் வேறு இனத்தினர் இலலை. அதுவும் ஆரியரின் இந்திய வருகைக்கு முன் இந்தியாவில் இருந்த ஒரே இனத்தினர் தமிழரே! வடபுலத் தமிழரே ஆரியர் வருகைக்குப் பினனும், சமசுக்கிருதம் எனும் அவர் மொழி செய்து கொள்ளப் பட்ட பின்னரும் திராவிடர் என்று அழைக்கப் பெற்றனர். இத் தெளிவான வரலாற்று உண்மைகளை உணராதவர்களே தமிழர் திராவிடர் என்றும், திராவிடர் என்னும் மூல இனத்தவரிலிருந்து வந்தவர்களே தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளர், துளுவர் முதலிய இருபத்தொன்பது இனத்தவர் என்றும், தமிழ் மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி என்றும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய அனைத்துத் திராவிட மொழிகளும் திராவிடம் என்னும் தொன்மை மொழியினின்று பிறந்த உடன்பிறப்பு மொழிகளே (Sisters Languages — சகோதர மொழிகளே) என்றும், பலவாறாகத் தத்தமக்குத் தோன்றிய கற்பனைக் கருத்துகளை வரலாறாக வைத்துத் தருக்கமிடுவர். இவை நிற்க.

இனி, மேற் கூறிய மொழி, இன வரலாற்றின் அடிப்படையில், இக்கால் உள்ள தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளர், துளுவர் முதலிய இனங்கள் அனைத்தும், பிந்தைய திராவிட இனத்தவர் என்றும், இவர்களில் சிலர் மிக முந்தைய திராவிட இனத்தவர் (Proto-Dravidians) என்றும், அவர்களே **ஆதிதிராவிட** இனத்தவர் என்றும், மற்றொரு வரலாற்றுப் பிழையினைச் செய்து வருகிறார்கள். இத் தவறான முந்தைய, பிந்தைய மதிப்பீட்டைத் தமிழின வரலாற்றை நன்கு உணராத மேலை நாட்டையும், வட இந்தியாவையும் சார்ந்த வரலாற்றாசிரியர்கள் சிலர் கூறி வந்தாலும், தமிழர் தவிர பிற தெலுங்கு, கன்னட, மலையாள, துளு இனத்தினர் தங்களுள் ஆதி திராவிடர் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் தமிழருள் உள்ள பழந்தமிழ் இனத்தவரையே ஆதி திராவிடர் என்றும், தங்களுக்குள் உள்ள பழங்குடியினர் சிலரை, ஆதி ஆந்திரர் (தெலுங்கர்), ஆதி கன்னடர், ஆதி கேரளர், ஆதி துளுவர் என்றுமே கூறி வருகின்றனர். உண்மையில் தமிழர் திராவிட இனத்துள் அடங்குபவரே அல்லர். தமிழரினின்று ஆரிய மொழி, இனக் கலப்பால் உருவாகிய தெலுங்கரும், கன்னடரும், மலையாளரும், துளுவரும் பிற நடு இந்திய, வட இந்திய தமிழினத் திரிபுக்குடிகளுமே திராவிடர் ஆவர். இதில் 'ஆதி' என்பதற்குப் பொருளே இல்லை. எனவே, ஆதிராவிடர் என்று இடைக் காலத்தில் அடையாளங்காட்டப் பெற்ற பழந்தமிழரே தவறான முறையில் அப்பெயரால் அழைக்கப்பெற்று வருகின்றனர் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். எனவே அவர்கள் தங்களை **ஆதிதிராவிடர்** என்று அழைத்துக் கொள்ளும் வரலாற்றுப் பிழையை உணர்ந்து இனிமேல் தங்களை **ஆதித்தமிழர்** அல்லது அதனினும் சிறந்ததும் வரலாற்றுப் பொருத்தம் உடையதுமாகிய **பழந்தமிழர்** என்னும் சொல்லால் கூறிக் கொள்வார்களாக. இவ்வகையில், அவர்களும் தமிழரே என்னும் உண்மையை வலுப்பெறச் செய்யவும், அதில் ஒரு பெருமையை மற்றவர்கள் உணரச் செய்யவும் தங்கள் மேல் ஆரியர் சாற்றிய இழிவைத் துடைத்துக் கொள்ளவும் இயலும் என்று உணர்தல் வேண்டும். வரலாற்று அடிப்படையில் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர் என்றும், இழிக்குலத்தவர் என்றும் ஊர்ப்புறத்தே வைக்கப் பெற்ற கொடுமை, தொடக்கத்தில் அவர்கள் — தமிழரில் சிலர் — ஆரியரையும் ஆரியத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தமையால் ஏற்பட்ட விளைவால் நேர்ந்ததே என்பதை உணர்ந்து கொண்டால், அவர்களைப் பழந்தமிழர் என்பதே பொருத்தமும் உண்மையும் பெருமையும் ஆகும் எனத் தெளியலாம். மேலும், இவர்கள் ஆதிதிராவிடர் என்று தங்களை அழைத்துக் கொள்வதால், தமிழரினின்று இவர்கள் இன்று விலகி நிற்பது போல், பழந்தமிழர் என்று அழைத்துக் கொள்வதால் இவர்கள் விலகி நிற்கத் தேவையுமில்லை; இணைந்து நிற்கும் இன்றியமையாமையும் உண்டாகும் என்க. 'திராவிடர்' என்னும் பெயர் ஆந்திரர், கன்னடர், கேரளர், துளுவர் முதலிய அனைத்து இனத்தினர்க்கும் பொதுவானால், அவர்கள் ஏன் அப்பெயரால் தங்களை அழைத்துக் கொள்ள விரும்பவில்லை? திராவிடர் என்று கூறிக் கொள்ளும் வரலாற்றுத் தவறைத் தெரிந்தோ தெரியாமலோ செய்து விட்ட தந்தை பெரியாரும் கூட, இவ்வகையில் தாம் குழப்பம் அடைவதாகவே கூறியுள்ளதும் இங்குக் கருதத் தக்கது. அவ்வாறிருக்க, தமிழர்கள் மட்டும் தங்களைத் திராவிடர்களென்றும், அதிலும் தமிழின முந்தையர் தங்களைப் '**பழந்தமிழர்**' என்று கூறிக் கொள்ளாமல்,

'ஆதிதிராவிடர்கள்' என்று பொருளற்ற முறையில், தொடர்ந்து விடாப்பிடியாகக் கூறிக் கொள்ள ஏன் விரும்பவேண்டும்? இழிவை உடைமையாக்கிக் கொள்வது உரிமை மீட்பிற்கு உதவுமா, என்பதை எண்ணிப் பார்க்கும்படி அவர்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இனி, அரிஜன் (அரியின் மக்கள்) என்னும் பெயர் இவர்களுக்கு வருணச்சிரமத்தை ஆதரிக்கும் காந்தியால்—ஒரு போலிப் பெருமையாக—இடப் பெற்றதாகும் என்பதை இவர்கள் உணர்தல் வேண்டும். அப்பெயர் இவர்களை இழிவு படுத்துவதே அன்றிப் பெருமைப்படுத்துவதில்லை, மக்களில் ஒரு பகுதியினர் 'அரியின் (கடவுளின்) மக்கள்' என்றால், மறு பகுதியினர் யாருடைய மக்கள் என்பதற்கு அக் காந்தியாலும் விடை கூற முடியாது. எனவே அவ்வாறு அழைப்பது மிகப் பெரும் சூழ்ச்சியும் ஏமாற்றுமே ஆகும். ஆகவே, அந்தப் பெயர் கொண்டு தங்களை அழைத்துக் கொள்வதையும் இவர்கள் தவிர்த்துக் கொள்ளுதலே இவர்களின் தன்மானத்திற்குப் பெருமை தருவதாகும்.

அடுத்து, இவர்கள் தங்களைத் தாங்களோ, பிறரோ 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று கூறிக் கொள்வதும், கூறுவதை ஏற்றுக் கொள்வதும், தன்மானமின்மையும், தன்மதிப்பு (சுயமரியாதை) இழப்புமாகும் என்பதை உணர்தல் வேண்டும். இவர்களை ஆரியப் பார்ப்பனரே, தங்களைத் தாங்கள் வேத, புராண, இதிகாசங்களையும் ஏற்று மதித்துப் போற்றிக் கொள்ள மறுத்ததால், தாழ்த்தி வைத்தனர்; ஊருக்கு வெளியேயும் வாழ வைத்தனர். அதுவுமின்றி, இவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று இழிவாகவும் கூறினர். இதனடிப்படையில் இவர்களே தங்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று செயப்பாட்டு முறையில் தாங்களே கூறிக் கொண்டனர். இவ்வாறு கூறிக் கொள்வது மாந்தப் பிறவியையே இழிவுபடுத்துவதாகும். எனவே, இவர்கள் இப் பெயராலும் தங்களை அழைத்துக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, எல்லாவற்றுக்கும் மேலாக, இக்கால், தங்களைத் 'தலித்' என்னும் சொல்லால் கூறிக் கொள்வது தாங்கள் 'தமிழினத்தினர்' என்னும் மெய்ம்மத்தையே இழந்து கொள்ளும் இழிவு சான்றதாகும். 'தலித்' (Dalith) என்னும் மராட்டியச் சொல்லுக்குப் பள்ளம், பள்ளத்தாக்கு என்பது பொருள். இச்சொல் இடவாகு பொருளாகப் பள்ளத்தில் வீழ்த்தப்பட்டவன், அல்லது, தள்ளப்பட்டவன் அல்லது அமுக்கபபட்டவன் என்றெல்லாம் பொருள் தரும். இதற்கு ஒடுக்கப்பட்டவன், அடக்கப்பட்டவன் என்றும் பொருள் கொள்ளலாம். ஆங்கிலத்தில் Depressd என்னும் சொல்லுக்கு 'அழுத்தப்பட்டவன்' என்னும் பொருள் கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் Depresed classes என்று அழைப்பது போல், 'தலித்' என்னும் சொல்லால் இவர்கள் 'வீழ்த்தப் பட்டவர்கள்' 'பின்தள்ளப்பட்டவர்கள்' 'அடக்கப்பட்டவர்கள்' 'ஒடுக்கப்பட்டவர்கள்' என்று அழைத்துக் கொள்கின்றனர். இச்சொல் இந்தியாவின் அனைத்து இனக் கூறினர்க்கும் ஒரு பொதுவான சொல்லாக வழங்கப் பெறுவது ஒரு வகையில் தக்கதே எனினும், தமிழின வரலாற்றடிப் படையில் 'தாங்கள் சார்ந்த தமிழ் இனத்தின் மூதாதையர் என்பதையும், பார்ப்பனரை எதிர்த்து வெளியேறியவர் என்றும் பெருமையையும் குறிக்கும பழந்தமிழர் என்னும் சொல்லைவிடச் சிறந்ததாகக் கொள்ள முடியாது. எனவே, 'தலித்' என்பதால் இன இழப்பே ஏற்படும். இன இழப்பு அச்சு அடையாளமற்ற நாடோடி ஏதிலியர் என்னும் நிலையை ஏற்படுத்தி விடலாம். மேலும் இன்றைய இன உரிமை மீட்பு முயற்சிகளுக்கிடையில் இச் சொல் பொருளும் பொருத்தமும் உடையதன்று.

எனவே, இறுதியாக, தமிழினத்தில் 'தாழ்த்தப்பட்டவர்' ,ஆதிதிராவிடர்' 'அரிஜன்' 'தலித்' என்றெல்லாம் பிறரால் கூறப்பெறும்அல்லது தாங்களே கூறிக் கொள்ளும் சில வகுப்பினர், எந்த நிலையிலும், தமிழ் மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும், மற்ற இலக்கிய, கலை, பண்பாடு நாகரிகங்களுக்கும் முழு உரிமையுடைய வகையில் தங்களைப் பழந்தமிழர் என்றே கூறி, இன நிலையில் நிலை நிறுத்திக் கொள்ளவும், பெருமைப்பட்டுக் கொள்ளவும், அரசியல், பொருளியல் நிலையில் தங்களுக் குற்ற உரிமைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளவும் பாடுபடுவார்களாக. O

## திராவிடவியல் கருத்துகள் பற்றி...!

O மாண்பு நிறை ஐயா! வணக்கம்.

'தமிழ்நிலம்' இதழ் எண் 169-இல் தங்களின் அறிக்கை அஞ்சாமை, நேர்மை, தெளிவு நிரம்பிய அறிக்கையாக வெளியாகியுள்ளது. மக்களை ஏமாற்றும் பகற் கொள்ளை அரசியலாளர், அவர்க்குத் துணைபோகும் இடைத்தரகு மக்கள் இவர்களை யார் தான் என்றுதான் தண்டித்து மக்களுக்கு நலன் செய்வார்களோ!

இப்போது ஆண்டுகொண்டிருக்கும் ஆரவாரப் போக்கையும் முந்தைய அரசியல் தலைவர் கரவாளர் கலைஞரையும் கண்டு காட்டிய தங்கள் செம்மாப்பு தமிழச் செம்மாப்புத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்?! ஆனால் ஐயா, இவற்றிற்குத் தீர்வு காண தமிழகத்தை அணியப் படுத்தும் அணி எதுவோ?!

அன்புடன்

—மா.செ.தமிழ்மணி, ஆட்டுப்பாக்கம்

Scanned with CamScanner

# தமிழர்களின் அடிமைநிலையும், 'சாதியையும்'-'இறைவனையும்' இறுக்கமாக்கியுள்ள பார்ப்பனிய முடிச்சும்!

கரடிப்பட்டி. க.கண்ணன். அறி.இ.

தமிழர்களை,—ஏன்...? இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு தேசிய இனங்களின் பல கோடி மக்களையே பல்வேறு நிலைகளில்(குமுகவியல், அரசியல், பொருளியல்) கடந்த 2000 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து அடிமைப் படுத்தி ஆளுமை செய்கின்றனர், ஆரியப் பார்ப்பனர்கள். இந்த ஆளுமைத் திறத்திற்குப் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டாலும், குமுக அமைப்பின் பல கூறுகளாகவுள்ள 'சாதியையும்' மன வுணர்வின் ஒரு கூறுகவுள்ள'இறைவனையும்'எப்படி அன்றிலிருந்து இன்றுவரை விடாப்பிடியாக—குரங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டு,பார்ப்பனர்கள் அவற்றுக்குக் காலத்திற்குத் தகுந்தவாறு விளக்கங்கள் அளித்தும் வருவதையே இக்கட்டுரையின் மூலம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உலகில் வெவ்வேறு காலக் கட்டங்களில் மக்களை அடக்கி ஒடுக்கிய கொடு நெறிகளுக்குப் பல பெயர்கள் இருந்தாலும், இந்தியாவில் 'பார்ப்பனிய'க் கொடு நெறியைத்தான் பல மாந்த நேயச் சிந்தனையாளர்கள் மூதன்மையாகக் குறிப்பிட்டுள்ளனர். இப்பார்ப்பனியக் கொடு நெறியிலிருந்து ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் விடுதலை பெற, அவர்கள் காட்டிய வழிகள் வெவ்வேறனவையாக இருந்தாலும், நோக்கம் ஒன்றுதான். ஆயினும் இப் பார்ப்பனிய முடிச்சுகளைப் பல நிலைகளில் அவர்கள் ஓரளவு அவிழ்த்து(விளக்கி)க் காட்டியிருந்தாலும், சாதிக்கும்— இறைவனுக்கும் இடையில் போட்டு இறுக்கியுள்ள முடிச்சை அவிழ்த்து, இப்பார்ப்பனிய வல்லாளுமையை முற்றிலும் ஒழிப்பதற்கான வழியை யாரும் காட்டவில்லையென்றே தெரிகின்றது. அதனாலேயே, நாம் இன்னும் இப்பார்ப்பனியக் கொடு நெறிக்குள் துன்பப்படுகின்றோம். ஆகவே, இந்த மாந்த நேயச் சிந்தனையாளர்களின் —குமுக ஆய்வாளர்களின் கருத்துகளைத் தொகுத்தும், என் சிற்றறிவுக்கு எட்டியவையும், மற்றவரிடம் பார்த்தும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளையும் வரிசைப்படுத்தியுள்ளேன். பல்வேறு கோட்பாடுகள் முட்டி மோதி ஒன்றோடொன்று இணைந்தும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டுள்ள இன்றைய தமிழக அரசியல் சூழலில், எவ்வழி சரியானது—எல்லாருக்கும் பொதுவானது—குமுக இயங்கியல் தன்மைக்கு ஏற்றது என்பதை உலக மாந்த நேயப்பற்றும், அதற்கு முதற்படியாகவுள்ள தமிழக மக்களின் விடுதலையையும் பற்றிச் சிந்திக்கின்றவர்கள் நுட்பமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் அண்மைக் காலத்தில் நன்கு அறிந்த—பார்ப்பனிய முதலாளியத்திற்கு எதிரான சிந்தனையுடைய **அம்பேத்கார், பெரியார், பெருஞ்சித்திரனார்** மற்றும் மார்க்சிய சிந்தனையாளர்கள் சிலரின் கருத்துகளை முதலில் பார்ப்போம்.

அம்பேத்கார் அவர்களின் '**பார்ப்பனியத்தின் வெற்றி**' என்ற நூலின் கருவாக—பிழிவாக, "பார்ப்பனியம் செய்த வேலை மற்ற எல்லாரிடமிருந்தும் தான் ஒதுங்கிக் கொண்டது; தனக்குக் கீழாகவுள்ள அனைத்துக் குழுக்களையும் ஒன்றிடமிருந்து ஒன்று ஒதுக்கி வைத்தது. இத்தகைய ஒதுங்குதலும் ஒதுக்குதலுமே பார்ப்பனியம்"—என நாம் அம்பேத்கார் வழியில் வரையறுக்கின்றோம் என்று மார்க்சிய சிந்தனையாளர் அ.மார்க்சு அவர்கள் குறிப்பிடுகின்றார். அனைத்து நிலைகளிலும் குறிப்பாக அரசியலில் ஆளுமை நிலையிலுள்ள பார்ப்பனர்களின் நடைமுறையை அன்றிலிருந்து இன்றுவரை கூர்ந்து நோக்குவோர் இதை நன்கு உணரலாம். நடுவணரசுப் பணிகளில் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் மண்டல் குழுப் பரிந்துரையை நிறைவேற்ற வேண்டுமென்று வி.பி.சிங் அரசு முயற்சி செய்த போது, இதை மறைமுகமாக முறியடிப்பதற்கும், அரசைக் கவிழ்ப்பதற்கும் அயோத்தியில் பாபர் பள்ளிவாசலை இடித்து இராமனுக்குக் கோவில் கட்ட வேண்டுமென்று பார்ப்பனிய வெறிபிடித்த அத்வானி 'இரதம்' ஏறித் தம் சாணக்கிய திட்டத்தை நிறைவேற்றினார்.

அம்பேத்கார் அவர்கள் இறையுணர்வுள்ளவராக இருந்தும், பார்ப்பனியத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களைத் திரட்டிப் பல போராட்டங்களை நடத்தியும், இன்றும் கல்வி கற்ற பெரும்பாலான ஒடுக்கப்பட்ட மக்கள் கூடப் பார்ப்பனிய இந்து மத கோட்பாடுகளை விட்டு மீள முடியவில்லை, ஆக, சாதிகளைக் கொண்டு மக்களைப் பிரிக்கவும்—ஒடுக்கவும், எல்லாருக்கும் பொதுவான இறையுணர்வைக் காட்டி ஒன்றிணைத்து ஆளுமை செய்யவும் 'பார்ப்பனியம்' கற்றுக் கொண்டது.

பார்ப்பனிய நச்சு மரத்தின் சல்லி வேர்களை தமிழகத்தில் வெட்டி வீழ்த்தியவரும் ஆணிவேரை (இந்தியப் பார்ப்பனிய தேசியம்) அடையாளம்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர்: 3

# இந்தியர் ஆட்சியில் தமிழகம்

**(அதியமான்—தாழையூத்து.)**

*(இதழ் எண் : 169-இன் தொடர்ச்சி)*

**வைப்பகங்களும் கடன்களும்:**

நம்நாட்டில் மிகுதியான வைப்பகங்கள் உள்ளன. அவற்றில் பல நாட்டுடைமையாக்கப்பட்டவை. மக்களுடைய பணம் அங்கிருப்பதாய் அமைச்சர் சிதம்பரம் கூறினார். அவை வட்டிக்கடைகளாய் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உழவர், ஏழை எளியவர், படித்து வேலையற்ற இளைஞர், தொழிலாளி முதலானோர்க்குக் கடன் கொடுத்து வட்டி வாங்கிச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. பயிர்க்கடன், மாட்டுக்கடன், ஆட்டுக்கடன், கோழிக் கடன், வண்டிக்கடன், உரக்கடன், வீட்டுக்கடன், இப்படிப் பலவகையான கடன்களைக் கொடுத்து மக்களைக் கடனாளியாக்கிக் கொண்டிருக்கின்றன. இக்கடன்களை வாங்கும் தொகையில் ஒரு பகுதியை நன்கொடை(மானியம்) என்ற பெயரால் கொடுக்கிறது. இக்கடன்களை மக்களுக்குக் கொடுக்கும்படி ஊராட்சி ஒன்றியங்கள், தொழில் நடுவங்கள் (தொழில் மையங்கள்) வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யும். பரிந்துரை செய்யும் அலுவலர்களுக்குத்தான் நன்கொடைபோல் தெரிகிறது. பயிர்க்கடன் வழங்கும் நடைமுறைகளை மட்டும் வளர்க்கலாம். மற்றவையும் இப்படித்தானிருக்கும். பயிர்க்கடன் உழவர்களுக்குப் பயிரிடுவதற்கான செலவை வழங்கும். இக்கடனில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்கொடை உண்டு. கடன் தொகை முழுவதும் உழவனுக்குக் கிடையாது. மொத்தத் தொகையில் 75 விழுக்காடு உரம்; மீதிப்பணம். வடநாட்டுக்காரன் உருவாக்கம் செய்யும் உரத்தை விற்பனை செய்து கொடுக்க அரசின் ஒத்துழைப்பு. இதற்குப் படிவங்கள் உண்டு. அதில் நன்கொடை எவ்வளவு உரம் பூச்சிக் கொல்லி மருந்துகள் எவ்வளவு என்று வாங்குவோருக்குத் தெரியாது. அக்கடனுக்குக் குண்டான படிவங்களில் கையொப்பம் அல்லது பெரும் விரல் வரைகள் பதித்தல் மட்டுமே வாங்கப்படும். இப்படிப்பட்ட பணியில் ஆளுங்கட்சிகளை அடையாளங் காட்டும் வேட்டித், துண்டு. சட்டை அணிபவர்களும் ஈடுபடுவார்கள். ஆளும் கட்சி மாறினால் இவர்களும் மாறிக்கொள்வார்கள். ஆடைகளையும் மாற்றிக் கொள்வார்கள். அந்தப் படிவங்களை இவர்கள்தாம் நிரப்புவார்கள். அப்போதே இக்கடனை வாங்குவதற்கு செலவாகும் தொகையைக் கூறி வாங்கிக் கொள்வார்கள். என்ன செலவு என்று கேட்க முடியாது; கேட்டால் கடன் கிடைக்காது. எனவே எவ்வளவு தொகை நன்கொடை என்று தெரிந்து கொள்ள முடியாது. நன்கொடை; அலுவலர்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் ஒதுக்கப்பட்டது போலத்தான் தெரிகிறது. உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை நீக்கி மீதிப்பணத்தை வைப்பகங்களில் போய் வாங்கிக் கொள்ள வேண்டும். அங்குக் கட்சிக்காரர் துணைக்குச் சென்று அப்பணத்தை உழவர்களுக்கு வாங்கிக் கொடுப்பார். நன்கொடைத் தொகையை அவர் வாங்கிக் கொள்வார். காலங்கடந்த உரம், மருந்துகளை உழவியல் அலுவலகங்களில் போய் பெற்றுக் கொள்ள வேண்டும். யாவற்றையும் பெற்றுப் பயிரிட்டு அறுவடை செய்தால் வைப்பகத்திலிருந்து அலுவலர் வந்து அவர் கட்டவேண்டிய தொகையை வட்டியுடன் சொன்னபிறகுதான், நன்கொடை எவ்வளவு, கடன் எவ்வளவு,உரம் எவ்வளவு என்று தெரியும் அநதத் தொகையை உழவன் வாங்கி இருக்கவே மாட்டான். வந்த அறுவடைப் பயனை விற்றால் எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப் போட்டால் இன்னும் கடன் வாங்கினால்தான் கடனைக் கட்ட முடியும் என்ற நிலையைத்தான் பார்க்க முடிகிறது. நெல்லின் விலையை உறுதிப் படுத்துவது நடுவண் அரசு. அவர்கள் வடநாட்டில் விளையும் கோதுமைக்கு விலை கூடுதலாகவும். தென்னகத்தில் விளையும் நெல்லுக்குக் குறைவான விலையைுந்தான் உறுதி செய்கிறார்கள், எனவே தமிழ் நாட்டு உழவன் கிடைத்த கண்டு முதலை விற்றுக் கடனை அடைக்க முடியாமல் வட்டிக்கு வட்டி போட்டு வைப்பகம் வாங்கும் கடன் சுமையைத் தாங்க முடியாமல்,கூழைக்கூடக் குடிக்க முடியாமல், செத்துக் கொண்டிருக்கிறான். இக்கடனைக் கேட்பதற்காகக் கடன் பெற்றவனிடமிருந்து தண்டும் பணத்தொகைக்கு வட்டி, காலங்கடந்து கட்டநேர்வதால் கூட்டு வட்டித்தொகை, அலுவலர் வரப் போகும் செலவு (உந்து வண்டி வாடகை) வயலில் அவர்கள் சென்று பார்த்ததாக எழுதிவைத்துக்கொண்ட தொகை. ஆகியவற்றுடன் சேர்த்துக் கடன் தொகையும் சேர்த்துத் தண்டி விடுவார்கள். இது தொடர்பான கடிதங்கள் எழுதி இருந்தால் அதற்கான செலவும் இவற்றுடன் சேரும். வைப்பகங்கள் உழ்வனை இப்படிச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. இக்கடனால் பயனடைந்தவர்கள் வடநாட்டு உர முதலாளிகள், அரசு அலுவலர்கள்,கட்சி வேட்டி கட்டிய சோம்பேறிகள்,இக்கடன்களையே கட்ட முடியாமல் திணறும் மக்கள் தலையில் இந்திய அரசு வெளிநாட்டில் இருந்து வாங்கும் கடனும் வட்டியும் சேர்த்து இந் நாட்டு மக்கள் தலையில் ஒவ்வொருவருக்கும் உருபாய் 2321 சுமத்தப்பட்டுள்ளன. ஏறத்தாழ நேரு குடும்பம் 37 ஆண்டுகள் பேராயக் கட்சியின் பெயரால் இந் நாட்டை ஆண்ட அழகு, இன்னும் ஆள வேண்டும்

என்று ஆவல் கொண்டு குண்டு நுழையாத மேடைகளில் நின்று பேசுவதும், குண்டு நுழையாத மகிழ்உந்தில் செல்வதிலும் காலங்கழித்துக் கொண்டிருந்தது.

**வேலையற்ற இளைஞர்கள்:**

இந்தியாவின் முன்னேற்றம் எப்படி இருக்கிறது என ஆய்ந்து பார்க்க வேலையற்ற இளைஞர்களின் நிலையை எண்ணிப் பார்த்தால் போதும். பொருளியல் ஆய்வு தேவையில்லை எந்த நாட்டிலும் உழைக்கும் இளைஞர்களை முடக்கிப் போட்டுக் கொண்டிருக்கும் அவல நிலை வேறு எங்கும் காண இயலாது. இப்படி இளைஞர்களை உழைப்பின்றி வைத்திருப்பதே நாட்டிற்குப் பெருங்கேட்டைத் தந்துவிடும். நாடு பொருளியலில் தரை மட்டமாகி அழியும். இங்கு கல்வி கற்பவர்கள் எவரும் அறிவு வளர வேண்டும் என்பதற்கன்று. படித்துப் பட்டம் பெற்றவுடன் ஏதாவது பணிசெய்து பிழைக்க வேண்டும் என்பதே. பெரும்பாலும் அரசுப்பணியில் சேர்ந்து பணியாற்றவே விரும்புகிறார்கள். கல்வி முறைகளும் அப்படித்தான் உள்ளன, வேலை கிடைத்து வளமாக வாழலாம் என்றே படித்துப் பட்டம் வாங்குகிறார்கள், அவன் படித்து முடிப்பதற்குள் வீட்டிலிருக்கும் ஆடு, மாடு அவனப்பனுக்கு அவனுடைய மாமனார் கொடுத்த சீர்ப் பொருட்கள், அன்னை போட்டிருந்த நகை, தாலி முதலாக எல்லாம் போய்விடும். படித்து முடித்துவிட்டு வேலை தேடி இளைஞன் அலைகிறான். இத்தனை நாளும் செலவு செய்த தொகையை விடப் பல மடங்குகள் கூடுதலாக வேலையின் வகைக்குத் தக்க அழவேண்டும். இப்படிக் கேள்விப்பட்டவுடன் படிக்க வைத்த தாயும் தகப்பனும் அரத்தக் கொதிப்பில் மாளும் நிலைக்கு வந்துவிடுவார்கள். மகன் அல்லது மகள் வேலைக்குப் போகவேண்டுமே என்று மீதியாக இருக்கும் எதையாவது விற்றுக் கொடுக்க முன்வந்தால், குடிசை மட்டும் ஒருவேளை இருக்கும். அதையும் விற்றுக் கொடுத்துவிட்டு சிலர் ஏமாற்றப் பட்டு ஏமாறித் திரிகின்றனர். இப்படியாக அலைந்த ஏழையின் மகன் வேலை வாங்கும் அகவை முடிந்ததும், இனி வேலை கிட்டாது என்ற நம்பிக்கையில் தற்கொலைசெய்து கொள்கிறான். நாட்டிற்கு எவ்வளவு பெரும் இழப்பு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சிலருக்கு வேலை தேடித்தரும் அலுவலகத்திலிருந்து எண்கள் பரிந்துரைக்கப் படுகின்றன. என்ன வேலை தெரியுமா? சார உணவு(சத்துணவு) அமைப்பாளர், கூட்டுறவு அங்காடிகளில் விற்பனையாளர்! இவர்களுக்குச் சம்பளம் உருவா 150 முதல் 299 வரை. வேறு எவ்வகைப் படியும் கிடையாது. இதற்கு வேண்டிய பொதுக் கல்வி 10-ஆம் வகுப்பில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பட்டம் பெற்றவர்களும் இந்த வேலைகளுக்கு வருகிறார்கள். ஏறத்தாழ 22 ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற பல ஆயிரம் உருவாக்களைச் செலவு செய்திருப்பார்கள். இந்த வேலைக்குப் பார்ப்பனர் வரார். சூத்திரர்கள் தாம் மிகுதி. கடைநிலை ஊழியர் வாங்கும் சம்பளங் கூட இல்லை. இந்த நாட்டில் எவனாவது முன்னேற முடியுமா? இந்த வேலைக்கும் கையூட்டு உண்டு. ஐயோ தமிழ் நாட்டில் பிறந்ததற்காக இந்நாட்டு இளைஞர்கள் படும்பாட்டைப் பார்த்தீர்களா! பெரிய வேலைகளில் இருப்போர் பெரும் பணக்காரர்கள். அவர்கள் கேட்ட கையூட்டைக் கொடுத்து வேலை வாங்கிக் கொள்கிறார்கள். இவ்வளவு பெருந் தொகையைக் கொடுக்க இயலாதவர்கள் வேலை கிடைக்காததால் நஞ்சுண்டு மடிகிறார்கள். அவன் சாவிற்குக் கரணியம் வயிற்றுவலி; தாங்க முடியாமல் நஞ்சை அருந்தி விட்டான் என்று காவலர்கள் எழுதிவைத்து விடுவார்கள். அவ்வகையில் எழுதாத நேர்மையான அதிகாரிகளை ஏதாவது கரணியங்காட்டி வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். இதற்கஞ்சுபவர்கள் அரசின் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கென்று பல பட்டங்கள் அரசால் வழங்கப்படுகின்றன. பாராட்டுகளும் உண்டு, பதவி உயர்வுகளும் உண்டு. இவற்றிற்கும் நன்றிக் கடனாக அழுது தொலைக்க ஒரு தொகையும் உண்டு. எவனாவது உண்மையைச் சொல்ல முடியுமா? நாடு உருப்படுமா?

இந் நாட்டில் வாழும் பார்ப்பன இளைஞர்கள் ஒருவரும் வேலை இல்லாமல் இல்லை. இங்குதான் சாதியின் எண்ணிக்கைப்படி வேலை கொடுக்க வேண்டும் என்ற சட்டமும் உள்ளது. எப்படி 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர் அனைவரும் அரசு வேலையில் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கக் கூட இந் நாட்டில் யாருமில்லையா? 97 சூத்திரர்களும் தலை எழுத்தைப் படிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். கணியனை(சோதிடனை)த் தேடி அலைகிறார்கள். ஆனால் இந்த நிலை என்றைக்கும் நீடிக்காது. இளைஞர்கள் கிளர்ந்து எழுந்து விட்டால் நாடு சுடுகாடாகும். இளைஞர்களிடம் சூடு ஏறிக் கொண்டிருக்கிறது. எத்தனை நாள்களுக்குப் பட்டினி கிடப்பார்கள்? பசி வந்து விட்டால் பார்ப்பனர் ஆட்சி பறக்கும்! இன உணர்வின்றிக் கள்ளத் தொழில் செய்யும் கயவர்களை இளைஞர்கள் சந்தியில் நிறுத்திச் சாட்டையால் அடிக்கும் நாள் வரத்தான் போகிறது. எந்த அரசியல் கட்சிக்காரர்களும் இந்த இளைஞர்களுக்கு ஒரு வழியைக் காட்டுவதாய்க் கூறவில்லை. அவர்கள் பதவிக்காக ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் அவரவர் தலைவர்களை முதலமைச்சர் என்று வரவேற்புக் கொடுத்துக் கொண்டு வாயைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். சட்ட அவையைக் கலைத்த பிறகு இப்படியோர் அவா தோன்றியுள்ளது. வேலையற்றிருக்கும் மக்கள் பெருகினால் நாட்டின் பொருளியல் சீர்குலை-

யும்; என்ற அறிவு இல்லையே! பணியாற்ற வேண்டிய இளைஞர்கள்—இளமையை இன்பமாய்க் கழிக்க வேண்டிய இளைஞர்கள்—வாடிவதங்கிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் குவிந்து கிடக்கும் கறுப்புப் பணத்தை யாராக இருந்தாலும் சரி, பிடித்து எடுத்து விட்டால் இளைஞர்களுக்கு வேலை கொடுத்து விட ாம். இதை அரசு செய்ய மறுத்தால் இளைஞர்க செய்வார்கள். இளைஞர் உலகம் குமுறிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் நடக்கும் போர் இப்படித்தான் தொடங்கியது. இங்கும் தொடங்கினால்தான் இளைஞர்கள் வாழமுடியும் எனத் தோன்றுகிறது. இப்படி இந்த நாட்டு மக்கள் துன்பப்படும் போது ஆட்சியாளர் உலகச் சுற்றுலாப் போய் வருகிறார்கள்.

**விழாக்களும் வீணடிப்புகளும்:**

இந்தியா என்ற நாடு ஏழைகள்] நிறைந்த நாடு. இன்னும் ஏழைகள் உருவாகி இரவலர்களாகும் நிலையில் உள்ளது. பெரும் நகரங்களில் சாலையோரங்களில் வாழ்கிறார்கள், மக்கள். அவர்கள் அரும் பாடுபட்டு உழைக்கிறார்கள். ஆனால் பொருளியல் உயர்வு குதிரைக் கொம்பு. மக்களின் வருமானம் வகுசரி உருவா 125/—எனச் செய்திகள் கூறுகின்றன. உலக நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் கடைசி இடத்தில் இந்தியா உள்ளது. இந்த வருமானத்தைக் கூட்ட இந்திய அரசு எவ்வகைத் திட்டத்தையும் செயல் படுத்தவில்லை, எனக் கூறிவிடலாம். இங்குதான் செல்வத்தை அள்ளி வழங்கும் திருமகள்(சீதேவி) குடி இருக்கிறாள். இவளை வணங்கிப் பூசனை செய்து பரிசுச் சீட்டை வாங்கினால் கோடி கோடியாகச் செல்வம் கிடைக்குமென்று இந் நாட்டு மக்கள் வணங்கி ஏமாறிவிட்டுக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் வருமான உயர்வை திருமகள் பார்த்துக் கொள்வாள் எனத் திட்டம் எதுவும் போடத்தேவை இல்லை என்று அரசு இருந்து விட்டது. இங்கு பெரும்பாலும் சிற்றூர்ப் புறத்தில் வாழும் அன்றாடங்காய்ச்சிகள். கல்வி, அறிவு ஆகியவற்றில் மிக மிகப் பின் தங்கிக் குடல் கூழுக்கு அழும் நிலையினர், தலையில் எண்ணெய் தேய்க்க வழியற்று ஆடிக்காற்றில் உதிரும் சருகு போன்ற மயிரை உடையவர்கள். கொஞ்ச வேண்டிய குழந்தைகள் கஞ்சி கஞ்சியென்று அலறுகின்றன. வேலையில்லா இளைஞர்கள் செய்தித் தாள்களைக் காலையில் பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டு ஏங்குகிறார்கள். பக்குவம் அடைந்த கன்னிப் பெண்களைத் திருமணஞ்செய்து கொடுக்க முடியாமல், பெருஞ்சுமையைச் சுமக்கும் பெற்றோர் பண்டங்களின் விலைக்கேற்ற வருவாய் இல்லாமையால் அலைமோதித்தட்டழியும் மக்களே மிகுதியாக வாழ்கின்றனர்.

இவ்வாறாகச் சில்லந் தட்டிப்போய் வாழும் மக்கள் நிறைந்த இந்நாட்டில் ஆளுபவர்கள் விழாக் கொண்டாடிப் பெருமையடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு விழாவிற்கும் பலகோடிக் கணக்கில் செலவு. இந்நாட்டின் தலைமையமைச்சர் வருகிறார், என்றால், அவர் வரும் வழிகள், தங்கும் இடங்கள் யாவும் பகட்டாக அழகு செய்யப்படுகிறது. பலவகையான கோபுரங்கள் வானளாவ எழுப்பி மின் விளக்குகளால் புனைவு செய்யப்படுகின்றன. மக்களுடையபணம் பாழடிக்கபபடுகிறது. அவருண்ணும் உணவு, வலிவூட்டும் வெளிநாட்டு விலையுயர்ந்த மாத்திரைகள், நிமையத்திற்கு நிமையம் மருத்துவர் ஆய்வு, வெளிநாட்டு விலை உயர்ந்த ஆடைகள், கோடிக் கணக்கில் பாதுகாப்புச் செலவுகள், செல்வதற்கு இரண்டு மூன்று வானூர்திகள், அது போன்று மகிழ் உந்துகள், நடக்கும் இடங்களில் பட்டு விரிப்புகள், தங்குவதற்குக் குளிரூட்டும் அறைகள், இன்னும் பலவகையான ஆடம்பரச் செலவுகள் செய்து, பணத்தைப் பாழடிப்புகள் செய்து, நாட்டின் முன்னேற்றத்தை முடக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டின் ஏழ்மை நிலைக்கு இவை தேவையே இல்லை. மக்கள் மீது அன்பு இருக்குமானால் இப்படிச் செய்து பாழடிக்கும் பணச் செலவைத் தலைமையமைச்சர் தடுத்திருப்பார். அவர் மக்களுடைய பணத்தில் ஆரவாரமாக வாழலாம் எனப் பதவிக்கு வந்தவர். இவற்றையெல்லாம் எண்ணும் போது, இது குடியாட்சி நாடன்று என உறுதியாகக் கூறிவிடலாம். ஆண்டு முழுவதும் விழா, விழா எனப் பாழடிக்கும் பணத்திற்கு எவ்வகையிலும், அளவே இல்லை. இப்படி வீணாக்கும் பணத்தை வைத்துப் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தினால் பஞ்சம் இங்கு வரவே வராது.

ஏழைகளின் நிலையென்னவென்று தெரியாத பகட்டுக்காரர்கள், பணக்காரர்கள் இந்நாட்டை ஆண்டு மக்களை அடிமையாக்குகிறார்கள். தப்பித் தவறி சிறிது ஊறும் அரத்தத்தை மூட்டைப் பூச்சிகள் போல உறிஞ்சிவிடுகிறார்கள். மக்களோ சிந்தனையற்றவர்கள். சீரழிவை எண்ணி ஏன் என்று கேட்கத் தெரியாத எடுப்பார் கைப்பிள்ளைகள். இந்த அடங்காப்பிடாரிகள் சிறிய மீனைப் பெரிய மீன் உண்பதைப் போல மக்களை உண்டு கொண்டிருக்கிறார்கள். மக்களை ஏமாற்றி ஒப்போலைகளை வாங்கிப் பதவியில் அமர்ந்து கொண்டு அழகு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு அரசியல் கட்சிகளின் மீது நம்பிக்கையில்லை. பிறகு ஆளுநர் ஆட்சியை விரும்புகிறார்கள், அரசியல் தலைவர்கள் வாழும் பகட்டான வாழ்க்கையைக் கண்டு அவர்களை வெறுக்கிறார்கள். இந்தியத் தலைமையமைச்சரும் குடியரசுத் தலைவரும் குண்டு நுழையாத வண்டிகளில்பயணஞ் செய்து, குண்டு நுழையாத மேடைகளில் நின்று பேசுகிறார்கள் என்றால், மக்களை இவர்கள் நம்பவில்லை என்று தானே பொருள். இப்படியெல்லாம் தம் தம் நலத்-

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டியவரும் தந்தை பெரியாரேயாவார். ஒரே சமயத்தில் சாதியத்தையும் எதிர்த்தார்; கடவுளையும் எதிர்த்தார். அவரின் உழைப்பால் அடித்தள மக்களில் சிலர் மீட்சி பெற்றனர். ஆயினும் பார்ப்பனியத்திற்கு எதிரான பல போராட்டங்களைத் தம் இறுதிக் காலம்வரை நடத்திய தந்தை பெரியார், படிக்கட்டுநிலையில் ஒன்றையொன்று அழுத்திக் கொண்டுள்ள சாதியத்தன்மையையும், வகுப்பு முரண்பாடுகளையும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இங்கு மக்களுக்குச் சாதியுணர்வும் மதவுணர்வும் ஊட்டப்பட்ட தன்மையையும், இயற்கையான இறையுணர்வையும் முழுமையாக அறியாமல்; பகுத்தறிவு என்ற ஒரு கருவியை மட்டும் கொண்டு பார்ப்பனியத்தோடு போராடிக் களைப்புற்றே தம் வாழ்வை முடித்தார்.

மாந்த இனத்தின் தோற்றத்தையும், அதன் படி நிலை வளர்ச்சியில் குழுக்களாகவும்,குலங்களாகவும்— அவையே பின்னர் சாதிகளாகவும் திரிந்ததையும் தம்முடைய மெய்யறிவு மூலம் வெளிப்படுத்திய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், 'இறைமை'(கடவுள்) பற்றி மெய்யறிவு நாட்டமுடையவர்களின் சிந்தனைக்குத் முடிவுகளை முன் வைக்கின்றார்.

'இறைமை' என்பது ஓர் இயற்கை உணர்வு. அது வேறுபாடற்றது; உரிமையைத் தூண்டுவது; விடுதலைக்கு வேரானது; சமநிலை உடையது; சமத்துவம் கற்பிப்பது; இன்பம் நல்குவது; பகைமையைத் தவிர்ப்பது; மாந்தனின் அகங்காரத்தை அகற்றுவது; அறிவை உணர்த்துவது; அன்பை வளர்ப்பது;அறியாமையை வார்ப்பது; தந் நலத்தை மறுப்பது; பொது நலத்தை தூண்டுவது; மக்களை ஒன்றுபடுத்துவது, பாகுபாட்டை அவிப்பது; இறைமைக்குச் சாதியில்லை; ஏழ்மையில்லை. இவற்றுக்கு நேர் எதிரான மெய்ம்மங்களைக் கொண்டதே மதம்,'—என்றும்,

"இறைமை இயற்கையான ஓர் உணர்வாதலின், அதை ஒழிக்க இயலாமல் அல்லல் படுகின்றனர். மதம் இறைமையின் மேல் கட்டப்பெற்ற ஒரு செயற்கையான உணர்வு. அதில் மக்களினத்துக்குத் தேவையில்லாத—தீங்கான பல கூறுகள் இருப்பதால், அதை ஒழித்தே ஆக வேண்டும் என்று நினைப்பது சரி. ஆனால் அதற்காக இயற்கை உணர்வான இறைமையையே ஒழிக்க முயல்வதால் தான் இத்தனை இடர்ப்பாடுகள் படவேண்டியுள்ளது" —என்றும்,

"எனவே, இளைஞர்களின் நோக்கு, மதத்தை ஒழிப்பதிலும் அதற்குத்துணையாக உள்ளசாதியைத் தகர்ப்பதிலும் இருக்க வேண்டுமே தவிர, இறைமையை ஒழிப்பதில் இருக்க வேண்டாமென்பதும் முதலாளியத்தை ஒழிக்க வேண்டும், முதலை ஒழிக்க வேண்டாமென்பதுமாகவே இருக்க வேண்டும்.அத்துடன் இவற்றுக்கு மறுதலையாக, இறைமையை வளர்க்க வேண்டும்; அதுபோல முதலையும் வளர்க்க வேண்டும். என்பனவும் நம் கொள்கை என்று கொள்ள வேண்டும். அதோடு, உண்மையான இறைமை வளர்ச்சி மதத்தையும் சாதியையும் ஒழிக்க உதவும் என்பதையும், உண்மையான முதல் வளர்ச்சி முதலாளியத்தையும் ஒழிக்க உதவும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்"—என்றும் கூறுகின்றார்.

மேற்கண்ட முடிவுகளை வெளிப்படுத்திய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், இறுதியாகச் சாதிகளுக்கும் இறைவனுக்கும் எவ்வாறு பார்ப்பனியம் முடிச்சுப் போட்டு இந்திய துணைக் கண்ட மக்களையும் குறிப்பாகத் தமிழக மக்களையும் மீள முடியாத அடிமை நிலையில் ஆழ்த்தியுள்ளது என்பதையும், பார்ப்பனியத்தின் உயிர்தளத்தையும் அதிலிருந்து மீள்வதற்கான வழியையும் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

"இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும்;தமிழர்கள் இந்துவாக இருக்கும் வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டுவிலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டுவிலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையின்றும் தமிழன் மீளவே முடியாது.அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலை தூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும்,ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம் மூழு மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்"—என்று கூறுகின்றார்.

மேற்கண்ட மூன்று மாந்த நேயச் சிந்தனையாளர்களும் பொது எதிரியாகிய பார்ப்பனியத்தை அடையாளங் காட்டிய நிலையும்—வழிகளும் கால மாற்றத்திற் கேற்ப, தங்களின் பட்டறிவுக்கேற்ப படிப்படியாக ஒரு தெளிவான திசையே நோக்கி இருந்தாலும், அப்பார்ப்பனியத்திற்குத் துணையாக அப்பார்ப்பனியக் கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டு, நம் இனத்திலேயே, வகுப்பிலேயே, பயிரில் களையைப் போன்று இருப்பவர்களை அடையாளம் காட்டாமல் பொது எதிரியை நாம் எப்படி அழிக்க முடியும்? இச் சறுக்கலிலேயே இவர்களின் பார்ப்பனிய எதிர்ப்புக் கொள்கைத் தோல்வியும் இருக்கின்றதோ?

இந்த மாந்த நேயச் சிந்தனையாளர்களின் கருத்துகளை உட்செரித்துக் கொண்டு, தள்ள வேண்டியதைத் தள்ளியும்: கொள்ள வேண்டியதைக் கொண்டும்தான் நாம் அடுத்தக் • கட்டத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில் அவர்கள் பாதை அமைக்காவிடில் நாம் இவ்வளவு தொலைவு வந்திருக்க முடியாது. அவர்கள் கல்லும், முள்ளும், செடிகளும் நிறைந்த காடுகளை அழித்துச் செம்மைப் படுத்திப் பயிர் விளைவிக்காவிடில், இன்று நாம் களைகளைப் பிடுங்கி அறுவடை செய்ய முடியாது. ஆகவே இவர்களின் சிந்தனைகளை மனத்துள் கொண்டு, அடுத்து மார்க்சிய ஆய்வாளர்களின் கருத்துகளையும் வழிகாட்டல்களையுமே இனிமேல் இளைய தலைமுறை கடைபிடிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் 'உலக முதலாளியம்' என்னும் இரும்பு வளையத்திற்குள் உலகத்திலுள்ள உழைக்கும் மக்களெல்லாம் அடைக்கப்பட்டபிறகு, இந்த இரும்புத் தொடரியில் (சங்கிலியில்) நாமெல்லாம் இணைக்கப் பட்ட பிறகு, உள்ளும் புறத்தும் அரசியல் போக்குகளை நாம் தெளிவாக அறிய வேண்டியுள்ளது.

அவ்வகையில் சிறந்த மார்க்சிய அறிஞரும், இந்தியாவில் தேசிய இன முரண்பாட்டின் முதன்மையை ஆய்ந்து கண்டவர்களில் ஒருவரும், தமிழ்த் தேசிய இன ஓர்மையையும் குமுக இயங்கியலையும் இணைத்துத் தமிழக ஆய்வரண் மூலம் ஏராளமான ஆய்வு நூல்களை வெளியிட்டு இன்றைய இளைஞர்களுக்கு வழிக்காட்டியவருமான தோழர் குணா அவர்கள் 'சாதியத்தை'ப் பற்றியும் 'மெய்யியல்' பற்றியும் கீழ்க்காணுமாறு விளக்குகின்றார்.

**சாதிகள்:**

"அரத்த உறவும் குலப்(Clam)பிறப்பும் சாதிகளை வரணங்களிலிருந்தும் வகுப்புகளிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. நாகரித்திற்கு ஆட்பட்டுக் குலையத் தொடங்கிய குலங்களின் எச்சங்கள்தாம் சாதிகள். அஃதாவது, தொல் குலங்கள்தாம் சாதிகளாகத் திரிந்தன. ஒன்று மற்றொன்றுதல் என்னும் இயங்கியல் தெரிந்திருந்தால் இது விளங்கும். பெரிய குமுக மீத்தங்களும் (உருவாக்கப் பொருள்கள்) வகுப்புகளும் (வர்க்கம்) இல்லாத நாகரீகத்திற்கு முந்திய வாழ்வியல்தான் முதலில் இருந்து வந்தது. அப்போதிருந்த தொல் குலங்களெல்லாம் பிறப்பையும் அரத்த உறவையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவற்றில் ஒரு சில குலங்கள் தத்தம் அகப்புற முரண்பாடுகளாலும் தொல் போர்களாலும் அலைக்கழிக்கப்பட்டுச் சிதையத் தொடங்கின. இத்தகைய சிதைவையும் உடைப்பையும் ஏற்படுத்தியது தொல் குலப் போர்கள்தாம். இந்நிலையில், அண்டை அயல் குலங்கள் வந்து ஆநிரைகளைக் கவர்ந்ததால் வந்த குலப் போர்களிலிருந்து தங்களைத் தாங்கள் காத்துக் கொள்ள, அரண்களையும் காவல்களையும் கட்டிக்கொண்டனர். குலத் தலைமை இதனால் ஒரு படைத் தலைமையாகவும் மாறியது. அத்தலைமையைத் தலைமுறை வழியில் அமைத்துக் கொள்ள நேர்ந்தது.

(தொடரும்)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு மக்கள் பணத்தையெல்லாம் செலவிட்டு மக்களை ஒட்டாண்டிகளாக ஆக்குவது உறுதி. மக்களும் இவர்களை ஓட ஓட விரட்டியடிப்பதும் உறுதி. மக்கள் எப்போதும் ஏமாளிகளாக இரார்; கிளர்ந்தெழுவர்.

இப்போது இந்தியாவைப் பார்ப்பனரே ஆண்டு கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய மூளையைச் சிந்திக்க விடாமல் வேத புராணக் கதைகளை மூடத்தனமாக எழுதிப் பரப்பி மக்களை அடிமையாக்கியவர்கள். கொடுமையாளர்கள். இந் நாட்டில் இன்னும் எச்சில் இலைகளில் உள்ள மிச்சத்தை உண்ணும் மாந்தர்களைப் பார்க்கிறோம். அவர்களுக்காக யாரும் இரங்கி இருந்தால் இப்படியொரு காட்சியைக் காணமுடியுமா? அவர்களைப் பற்றிச் சிந்திப்பவர்களைப் பகடி செய்து கொண்டிருக்கிறார்கள். அவனவன் தலையெழுத்துப் படி நடக்கும் என்று முயற்சியைக் கைவிட்ட கரவில்லா ஏழைகள் மக்களைச் சுரண்டி கோடி கோடியாகப் பணத்தைக் கட்டி வைத்திருப்பவர்களை அடையாளங்கண்டு பிடுங்கிப் பங்கு போடுவது உறுதி. எப்போதும் பட்டினி கிடக்க முடியாத மக்கள் அல்லவா?

பார்ப்பனர்களைத் தவிர ஏனையோர் எம்முயற்சி செய்தாலும் வாழ முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். நாற்பத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்யும் பேராயக்கட்சியினர் அவர்களுடைய வாழ்வை வளம் பெறச் செய்து கொண்டிருக்கிறார்கள். நடுவணரசைக் கைப்பற்றியுள்ள இந்தி முதலாளிகள் தமிழர்களுக்குப் பல கொடுமைகளைத் துணிவாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். காட்டாக, இலங்கைவாழ் தமிழர்களை இந்தியத் தமிழர்கள், கொடுக்கும் வரிப் பணத்தைச் செலவு செய்து அவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தார். தமிழகத்தை முன்னேறவிடாதபடிக்கு உழவுத் தொழிலிலிருந்து தொழிற்துறை வரை முடங்கும்படி செய்து கொண்டிருக்கிறார்கள். வடநாட்டை வளம்பெறச் செய்துவிட்டுத் தமிழ் நாட்டையும், தமிழர்களையும் வஞ்சிக்கிறார்கள். எனவே பொது வாழ்வில் இருக்கும் பெருந்தலைவர்கள் அறிவாளிகள் நினைத்தால் தமிழ்நாட்டு மக்களைச் சிந்திக்க வைக்க முடியும். அதன், பிறகுதான் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற குரலை எழுப்ப முடியும். வெற்றியும் கிட்டும். இனி தமிழ்நாடு இந்தியாவில் ஒட்டிக் கொண்டிருக்க முடியவே முடியாது. O

தொடர்: 2

—முன் இதழ்த் தொடர்ச்சி.

# தமிழா, நீ ஆர்த்தெழு!

-இலெனார்டு.

மொத்தத்தில், திராவிடம் எனக் கொக்கரித்துக் கொண்டுவந்த எல்லாக் கொள்கையிழந்தவர்களாலும் இந்தஇனம் மீண்டும்,மீண்டும் காட்டிக்கொடுக்கப் பட்டது;சுரண்டப் பட்டது. வழக்கம்போல் தமிழர்கள்எவ்வகை எதிர்ப்புமின்றித்திறனுமின்றி, அடிமை விருப்பத்தில் மூழ்கி இவ் வொப்போலிப் பொறுக்கிக் கட்சிகளை வெறிபிடித்து ஆதரித்தனர்.

கருணாநிதி, எம்.சி.ஆர்., செயலலிதா,என திராவிடர் கழகங்களின் தலைமை, கழுதை தேய்ந்துக் கட்டெறும்பாய், ஒன்றுக்கும் உதவாமல் போனது; தொடர்ந்து தமிழின இரண்டகர்களே இக்கழகங்களின் சார்பாய் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இவ்வுதவாக்கரைகளுக்குப் பின்னால் ஊளையிட்டு, மண்டியிட்டு, காலில்விழுந்து, அடிமை எச்சங்களைப் பொறித்துக் கொண்டு, மானமிழந்துநிற்கும் ஓர் இனமாகவே தமிழினம் இன்றும் காட்சி தருகிறது.

ஒருபுறம் வந்தேறிகளின் கொடுங்கோன்மை தமிழகமெங்கும் கோலோச்ச, மறுபுறம் நம் இன மக்கள் அடிமை வேட்கையில் வீழ்ந்து கிடந்து அதையே சுவைத்துக்கொண்டு வாழ்வை இழப்பது துயரமானதே. இம்மாதிரியான ஓர் இக்கட்டான சூழ்நிலையில், இனமானம் காப்பதும், இழந்த மண்ணை மீட்பதும்,இன விடுதலையை வென்றெடுப்பதும் மிகப் பெரும் பணியே.**தமிழரை அவரது சூழ் நிலை அறியாமைத் தூக்கத்திலிருந்து அடித்து எழுப்ப வேண்டும்.**

தமிழினத்திற்கெதிரான இரண்டகத்தையும், அதைக் கச்சிதமாக நிறைவேற்றும் வஞ்சகர்களையும் நாம் அடையாளம் காட்ட வேண்டும்.

இன்றே தமிழ் இனம் ஆர்த்தெழுந்தாலொழிய, இழப்பும் அழிவும் தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதே உண்மை.

### எங்கெங்கு நோக்கினும் தமிழர் சிறுபான்மையினரே!

தமிழகம் தவிர்த்த, இந்தியாவின் பிற மாநிலங்களில் மட்டும் தமிழர்கள் ஒரு கோடி பேருக்கு மேல் வாழ்கின்றனர். ஆனால் எப்படி வாழ்கின்றனர்? பிற இன ஆண்டைகளுக்கு உழைத்துப் போட்டுவிட்டு, மற்றவர்களின் ஊர்கள், நகரங்கள், மற்றும் அவர்களின் வசதிகளைத் தம் கடின உழைப்பினால் கட்டி எழுப்பிவிட்டு நகர்ப்புறங்களின் சாலையோரங்களிலும், சேரிகளிலும், நாறும் சாக்கடைக்கருகிலும், ஓர் இழி சூழ்நிலையிலேயே வாழ்வைத் தள்ளுகின்றனர். இப்படி ஒரு புறம் இருக்க, தமிழகத்தினுள் இருக்கும் பிற இனத்தவரின் நிலை என்ன? தமிழகத்திற்குள்ளேயே தமிழனின் நிலை என்ன?

— சென்னையிலுள்ள மார்வாரிகளின் பணப் புழக்கம் தமிழக அரசின் வரவு—செலவுப் பணப் புழக்கத்தையும் விஞ்சுகிறது.

— தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான வாணிகம் வேற்று இனத்தவரின்—குறிப்பாக வடவர், தெலுங்கர் மற்றும் மலையாளிகளின் கைகளிலேயே உள்ளது.

— நெல்லையிலுள்ள புன்செய் நிலத்தில் மூன்றில் ஒரு பகுதி தெலுங்கர்களிடம் உள்ளது.

— குமரி மாவட்டத்தின் தொய்வத்(இரப்பர்) தோட்டங்கள் பன்னாட்டு நிறுவனத்தின் கையிலும், மலையாளிகளின் கைகளிலும் போய்ச் சேர்ந்து விட்டன.

— கேரள எல்லையையொட்டிய தமிழகத்தினுள் இருக்கும் பெருவாரியான நிலங்கள், மலையாளிகளால் குறைந்த விலையில் சூறையாடப்பட்டு விட்டது. அது போலவே தமிழகத்தின் வடபகுதி தெலுங்கு வந்தேறிகளால் கைக்கொள்ளப் பட்டு விட்டது.

— தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டின் இன்றைய "தலைவர்களும, தலைவிகளும்" **தமிழரல்லர் என்பதே ஒரு கசப்பான உண்மை.**

தமிழரொருவர் பிற மாநிலத்தில் பிற இன மக்களின் தலைவராக முடியுமா? கனவிலும்தான் அதை நினைத்துப் பார்க்க முடியுமா? ஆக, பிற இனத்தவர் இங்கு வந்து கைக்கொள்ள, வன்கவர்பு செய்ய, ஆட்சி புரிய அனுமதித்து விடும் ஏமாளிகளாக நாமிருக்க, நம் இன மக்களோ இரவலர்(பிச்சைக்காரர்)களாய், பிற இனத்தவர்க்குக் குற்றேவல் புரிபவர்களாகவும், கோழைகளாகவுமே இருக்கின்றனர்.

### காவிரி ஏமாற்று(மோசடி):-

உலகில் உள்ள ஒரே ஆறு பல நாடுகளுக்கிடையே ஓடிக் கொண்டிருப்பதற்குப்பல எடுத்துக் காட்டுகள் கூறலாம்.டானயூப் ஆறு ஐரோப்பாவில் பல நாடுகளுக்கிடையில் ஓடுகிறது. செயின்ட் லாரன்சு ஆறு கனடாவில் உருவாகி அமெரிக்காவில் நுழைகிறது. நைல் ஆறு எத்தியோப்பாவில் உருவாகிப் பல நாடுகளைக் கடந்து, எகிப்தில தீவு (டெல்டா)ப்பகுதியை உருவாக்கிக் கடலில பாய்கிறது. சிந்து ஆறு இந்தியாவில் உருவாகிப் பாகிசுத்தானின் வழியே கடலில் கலக்கிறது.கங்கை ஆறு இந்தியாவில் உருவாகி வங்க தேசத்தில்

நுழைந்து பின் கல்கத்தா வழியே கடலில் கலக்கிறது. உலக வழக்கப்படி ஆறு எங்குபோய் சேருகிறதோ அவ்விடமே நீர்ப்பங்கீட்டில் முதன்மை பெறுகிறது. மேற்குறிப்பிட்ட ஆறுகளில், மேல் பகுதியில் உள்ள எந்த நாடும், கருநாடக அரசு தனனிச்சையாக மூன்று அணைகளைக் கட்டித் தமிழ் நாட்டுக்கு உரிய நீரைத் தடுத்து விட்டது போலத் தடுக்கவில்லை. காசுமீரச் சிக்கலில், பாகிசுத்தானுடன் போர்தொடுத்த காலங்களில் கூட. இந்தியா சிந்து ஆற்றில் பாகிசுத்தானுக்கு உரிய நீரைத் தடுத்துநிறுத்தவில்லை. தன் விருப்பமாக அணைகட்ட முயற்சி செய்யவில்லை. கருநாடகமும், தமிழகமும் இரு நாடுகளாக இருந்திருக்குமேயானால், கருநாடகம் மேற்சொன்ன மூன்று அணைகளையும் கட்டிவிட முயற்சி கூட செய்திருக்க முடியாது. கட்டியிருந்தால் உலக அறமன்றத்திற்கு வழக்கு சென்றிருக்கும் அதுவே அனைத்து நாட்டுச் சிக்கலாகியிருக்கும். இந்தியாவுள்ளும், பல மாநிலங்களுக்கிடையே ஆறுகள் ஓடுகின்றன. கிருட்டிணை, துங்கபத்திரா என எடுத்துக்காட்டிற்குப் பல சொல்லலாம். ஆனால் அனைத்துத் தேச அளவிலும், இந்திய மாநிலங்களுக்கு நடுவிலும் கூட தமிழகத்திற்குக் காவிரிச் சிக்கலில் ஏற்படுத்தப்பட்ட கீழ்த்தரமான அறக்கேடு எங்கும் நடக்கவில்லை. ஞாயத்தைப் போரிட்டு வெல்ல, அறத்தை நிலை நாட்ட ''நம் மக்கள்'' என்று உணர்வு முழுமையாக அழைக்க தமிழ்த் தலைவர்கள் இருந்திருந்தால் இந்தக் கொடுமை நமக்கு நிகழ்த்தப்பட்டிருக்குமா? ஒப்போலைக்(ஓட்டுக்)காக மட்டும் உண்ணா நோன்பு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டிருக்குமா? ''ஒப்பந்தம் கால முடிவாகி விட்டது'' என்று கருநாடக அரசின் கயமைத்தனத்தை ஞாயப்படுத்தும் துக்ளக்—சோ, மற்றும் ஆர்.வெங்கிடராமன் போன்ற பார்ப்பனத் தமிழ் இரண்டகர்கள் தமிழகத்தினுள்ளேயே பொய்க் கருத்துபரப்பலில் ஈடுபடுகின்றனரே—இஃது எப்படி?

மூன்று பருவ நெல் விளைவித்துத் தந்த காவிரி—தஞ்சை வேளாண்மையினர்க்கு ஆண்டில் இப்போது எண்பது நாள்களுக்கே வேலை உள்ளது. ஒரு பருவம் நெல் போட்டு எடுக்கப் படாதபாடுபடுகிறார்கள். ஆனால் இந்த நிலையிலும், விலை—கொள் முதல் என்று வரும் போது நடக்கும் கொடுமைகளைப் பாரீர்! நம் உழவர்கள் ஒரு குவிண்டால் நெல் விளைவு செய்ய ஆகும் நிகரச் செலவு உருவா 150 ஆகும். ஆனால் கொள்முதல் விலையோ 146 என்றும், மறு ஆண்டு 145 என்றும் தமிழக உழவனுக்கு. இழப்பேற்படுத்தி நடுவண் அரசு, நெல்லைக் கொள்ளையடித்துச் சென்றது. ஆனால் அதே ஆண்டுகளில் வட நாட்டில் விளையும் கோதுமைக்கு உருவா 66 மற்றும் 95 என உழவனுக்கு ஊதியம் வைத்துக் கொள்முதல் செய்துள்ளது இந்த ஞாயமற்ற அரசு; காவிரியில் ஒரு புறம் தண்ணீர் மறுப்பு! மறுபுறத்தில் கடினமாய் உழைத்து ஈட்டியதிலும் கொள்ளை? ஏன் இந்தக் கொடுமை?

**எண்ணெயிலும் சுரண்டல்:**

அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகளின் நிலத்தடியில் ஏராளமான எண்ணெய் வளம் உள்ளது: ஆனால் அந்நாடுகள் இப்போது அந்த எண்ணெயில் கை வைக்காமல், வளைகுடா நாட்டு எண்ணெய் ஊற்றுகள் வற்றும் வரை காத்திருக்கின்றன: அஃது அறிவாளித்தனம்! ஆனால் நமது கதையோ வேறு: தமிழகத்தில் காவிரிப்படுக்கையிலும் பிற இடங்களிலும் பல ஆயிரம் சதுர ஆயிர மாத்திரி (கி.மீ) பரப்பளவுக்கு எண்ணெய் வளம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது: உலகிலேயே முதல் தரமான எண்ணெய் இஃது என்று அறிவியலார்கள் வியந்தனர்: ஆனால் விட்டு வைக்குமா நடுவண் அரசு?! ''ஓ.என்.சி.சி'' எனும் அரசு நிறுவனம் வெறும் 400 கோடி உருவா மட்டுமே முதலீடு செய்து, இருக்கின்ற எண்ணெயையெல்லாம் முரட்டுத்தனமாய் உறிஞ்சி, சராசரி ஆண்டொன்றுக்கு 2,500 கோடி உருவாக்களுக்கு மேல் ஊதியம் ஈட்டி வருகிறது: இந்திய நாடு முழுவதற்கும் எரிவளியை எடுத்துச் செல்ல குழாய்களைப் பதித்துக் கொள்ளையைத் தொடருகிறது: இம்மாதிரியான சுரண்டல்களெல்லாம் 'தேசியம்' எனும் மாயப் போர்வைக்குக் கீழேயே நடைபெறுகிறது:

**இரும்பாலைகள்:**

சேலத்தில் ஏராளமான இரும்பு மூலகம் (Ore) கிடைக்கிறது: பல ஆயிரக்கணக்கான கல்லெடை(டன்) இரும்பு ஆண்டொன்றுக்கு வெட்டியெடுக்கப்படுகிறது: ஆனால் உருக்காலைகளோ, இரும்பாலைகளோ சேலத்தில் கிடையாது. கடந்த ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சேலம் இரும்பாலைத் திட்டம் ஒதுக்கித் தள்ளப் பட்டது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 11,000 கோடி உருவா இரும்பாலைகளுக்கு ஒதுக்கப் பட்டும் ஒரு காசு கூட சேலம் ஆலைகளுக்காக வந்து சேரவில்லை. மறுபுறம் சேலத்தில் இருப்பது 'எவர்சில்வர்' தகடுகளை உருவாக்கும் உருட்டாலை மட்டுமே. பிற இரும்பாலைகள் வட நாட்டில் புக்காரோ, பிலாய், ரூர்கேலா, குர்க்காபூர், பான்பூர் போன்ற இடங்களில் இருக்கின்றன. மேலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கருநாடகத்திற்கும், ஒரிசாவுக்குமே வாய்ப்பு கிடைத்தது. அய்யகோ தமிழ்நாடு! சூத்திரத் தமிழ்நாடு என்ன பாடுபடுகிறது!

**சேது கடல்(சேது—சமுத்திரம்) திட்டமும்—கூடன்குளம் அணு மின நிலையமும்:**

யாழ்ப்பாணத்திற்கும், இராமேசுவரத்திற்கும் இடைப்பட்ட கடற்பகுதியானது அதிக ஆழமற்றது. ஆகவே, பெரும்பாலான கப்பல்கள் இவ்வழியே புக முடியாது. ஏறத்தாழ எல்லாக் கப்பல்களுமே இலங்கையைச் சுற்றி—அஃதாவது ஏறத்தாழ 500 கற்கள் அதிகப் பயணம் செய்தே வரவேண்டியுள்ளது: மேற்குறிப்பிட்ட இந்த

இடைப்பட்ட பகுதியை ஆழப்படுத்தும் திட்டமே சேது கடல் திட்டம். இது 'நிறைவேற்றப் பட்டால் தூத்துக்குடி உலகப் பெருமை பெற்ற துறைமுகமாகும். அதுமட்டுமல்லாமல் தென் தமிழகம் மிகப் பெரும் வளர்ச்சி அடையும். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே பரிந்துரை செய்யப்பட்ட இத் திட்டம், இன்னும் முழுமை பெறுமலேயே இழுத்தடிக்கப் படுகிறது.

ஆனால், நாம், 'வேண்டாம் வேண்டாம்' என மறுக்கும் கூடன்குளம் அணுமின் நிலையம் நம் மீது புகுத்தப்படுகிறது. இந்தியாவிலுள்ள அனைத்து அணுமின் நிலையங்களிலுள்ள மிகவும் ஏதமான கதிரியக்கக் கழிவுகளைப் புதைப்பதற்காகவே கூடன்குளம் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புகள் அதிகரிக்கவே அதே திட்டத்தினை பின்புறவாயில் வழியாகப் புகுத்தும் திட்டமே இப்போதைய கூடன்குளம் அணுமின் நிலையத் திட்டம். ஏதமான(ஆபத்தான) கல்பாக்கம் அணுமின் நிலையம் வந்த போதும் அது தமிழகத்தினுள் புகுத்தப்பட்டது. ஆனால், அதிலிருந்து கிடைக்கும் மின் ஆற்றலைக் கேரளா பயன்படுத்துகிறது. அதுபோலவே கூடன்குளம் உருவாக்கம் செய்யும் மின்சாரத்தைக் கேரளா பயன்படுத்தும். ஆக மொத்தத்தில், வளர்ச்சி கொணரக்கூடிய சேது கடல் திட்டத்தினை கிடப்பிலும்—அழிவை அமைத்து வருவது மட்டுமல்லாமல், கூடன் குளத்தினைச் சுற்றி வேறு தொழிற்சாலைகளே நிறுவ முடியாத நிலையை உருவாக்கும் கூடன்குளம் திட்டமே நம்மேல் புகுத்தப்படுகிறது. நடுவண் அரசின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையை நாம் என்னவென்று சொல்வது!

மண் இழப்பு:

சென்ற(1993)மார்ச்சு மாதம் தில்லிப் பாராளுமன்றத்தில், கேரள நாடாளுமன்ற உறுப்பினர் சார்லசு என்பவர் குமரிமாவட்டத்தைக் கேரளாவோடு இணைக்க வேண்டுமென ஒப்பாரி வைத்தார். குமரி மாவட்டத்தில் வெறும் பத்து விழுக்காட்டினரே மலையாளிகள்; இவர்களிலும் பெரும்பாலோர் அரசு அலுவலகங்களில் வேலைக்குப் புகுந்தவர்கள். ஆனால் இப்போதோ இவர்கள் கூறும் காரணம் என்னவெனில், குமரி மாவட்டத்தில் எழுபது விழுக்காடு மலையாளிகளே என்பது. மொழிவாரியாக மாநிலங்களைப் பிரிக்கும்போது தேவிகுளம், கன்னியாகுமரி, பீர்மேடு, சித்தூர், செங்கோட்டைக் காட்டுப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டிய வளங்கள், கண்ணகி கோயில் எனும் ஏராளமான தமிழ்ப்பகுதிகளை இழந்தோம். இது போதாதென்று இப்போது மதுரை மாவட்டம் பெரியகுளம் வரை கேரளாவிற்குச் சொந்தமானது என கேரள வெறியர்கள் போராடி வருகின்றனர். அறுபது விழுக்காடுகளுக்கு மேல் தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்து வரும் நகரம் பெங்களூர். அது, தமிழகத்தின் ஒரு பகுதியே. இருப்பினும் அதை இழந்தோம், கோலார் தங்க வயல் தொண்ணூறு விழுக்காட்டுக்கு மேல் தமிழர்களை உள்ளடக்கியது. இருப்பினும் அதையும் விட்டு விட்டோம். இந்த இடங்களிலெல்லாம் இப்போது பிற இனத்தவர்கள் நம்மைப் பார்த்து, 'தமிழர்கள் வேலை தேடி வந்தவர்கள்; இரவல(பிச்சைக்கார)ர்கள், என்றே பட்டம் சூட்டி வைத்திருக்கிறார்கள்;

(தொடரும்)

TN/MS(C)657

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு-90

குடியரசு, ஆட்சி அதன் நோக்கத்தைச் சரிவர செயல்படுத்தாவிடில், அது முடியரசாட்சியை விட மிகக் கொடுமையான தாக இருக்கும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 170.)

அனுப்புதல்:

தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1-50 |
| ஆண்டுக் கட்டணம் | உரு: 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு: 18-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.